# விவசாயிகள் அதிக லாபம் பெற யோசனை

First Published : 19 Jun 2012 01:14:01 PM IST

தருமபுரி, ஜூன் 18: மண்ணிற்கேற்ப தோட்டக்கலைப் பயிர்களைச் சாகுபடி செய்தால், விவசாயிகள் அதிக லாபம் பெறலாம் என மாவட்ட ஆட்சியர் ஆர். லில்லி திங்கள்கிழமை தெரிவித்தார்.

மொரப்பூர் ஒன்றியம், நவலை ஊராட்சியில் உள்ள சின்னகவுண்டம்பட்டியில் ஒற்றைச் சாளரத் தகவல் மையத்தை அவர் திறந்து வைத்துப் பேசியது:

விவசாயிகள் அனைத்துத் தொழில் நுட்பங்களையும் ஒரே இடத்தில் தெரிந்து கொள்ள இந்தத் தகவல் மையம் பயன்படும். வேளாண்மைத் துறையில் உள்ள அனைத்துத் துறைகள், பொதுப்பணித் துறை, கால்நடை பராமரிப்புத் துறை, மீன் வளத் துறை ஆகிய துறைகளைச் சேர்ந்த அலுவலர்கள் இந்த மையத்தில் இருப்பார்கள். விவசாயிகள் தங்கள் சந்தேகங்களை அவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். குறிப்பாக மா உயர் நடவு முறை, கரும்பு இரட்டை வரிசை நடவு முறை போன்ற சாகுடி முறைகளை அறிந்து கொள்ளலாம். சொட்டு நீர்ப் பாசனத்துக்கு 100 சத மானியமானது சிறு, குறு விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. இவற்றைப் பயன்படுத்தி நமது மாவட்டத்தின் மண்ணிற்கேற்ப தோட்டக்கலைப் பயிர்களை சாகுபடி செய்து அதிக லாபம் பெறலாம்.

பிளாஸ்டிக் நில போர்வைகளுடன் தோட்டக்கலைப் பயிர்களை பயிர் செய்தால் தண்ணீர் தேவை குறையும், பாரம்பரிய முறையில் நெல் சாகுபடிக்கு மாற்றாக திருந்திய நெல் சாகுபடி செய்யலாம். கரும்புக்குப் பதிலாக பயிறு வகைகள் மற்றும் மக்காச் சோளம் சாகுபடி செய்யலாம். இதுபோன்ற புதிய தொழில்நுட்பங்களை விவசாயிகள் கடைபிடித்தால் தண்ணீர் பற்றாக்குறையைப் போக்கி சிறப்பாக விவசாயம் செய்யலாம்.

இந்தப் பகுதிகளில் பல லட்சம் லிட்டர் தண்ணீர் பற்றாக்குறை உள்ளது. எனவே, கிடைக்கும் நீரைப் பாதுகாத்து, சிக்கனமாக பயன்படுத்த வேண்டும். நீர் வளங்களையும், ஆதாரங்களையும் தூய்மையாகவும், மாசு படாமலும் பாதுகாக்க வேண்டும் என்றார் அவர்.

நிகழ்ச்சியில் வேளாண் இணை இயக்குநர் மனோகரன், வேளாண் வணிக துணை இயக்குநர் செல்வம், வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் முருகேசன், வேளாண் ஆராய்ச்சி மைய பேராசிரியர் தமிழ்செல்வன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## கால்நடை நோய் விழிப்புணர்வுப் பயிற்சி முகாம்

First Published : 19 Jun 2012 12:40:58 PM IST

கரூர், ஜூன், 18: கரூர் மாவட்டம், கொளந்தாகவுண்டனூரில் கால்நடை நோய்கள் குறித்த விழிப்புணர்வுப் பயிற்சி முகாம் திங்கள்கிழமை நடைபெற்றது.

கால்நடை பராமரிப்புத் துறை சார்பில், அஸ்காட் மாநில கால்நடை நோய் கட்டுப்பாட்டு உதவித் திட்டத்தின் (2011-12) கீழ், மாவட்டத்தில் கால்நடைகளை பராமரித்து வரும் விவசாயிகளுக்கு இந்த முகாம் நடத்தப்பட்டது.

முகாமை கால்நடை பராமரிப்புத் துறை உதவி இயக்குநர் குழந்தைசாமி தொடக்கி வைத்துப் பேசினார். கால்நடை மருத்துவர்கள் ராஜசேகர், ராஜேந்திரன், பழனிவேல் ஆகியோர் பங்கேற்று, கால்நடைகள் வளர்ப்பு, கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்கள், தடுப்பு முறைகள் குறித்து விளக்கினர்.

முகாமில் ஏராளமான விவசாயிகள், கோழிப்பண்ணை உரிமையாளர்கள் பங்கேற்றனர்.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

## நாட்டின் பருத்தி உற்பத்தி 10 சதவீதம் குறையும்

ஜூன் 20,2012,00:52



புதுடில்லி:நடப்பு நிதி ஆண்டில், நாட்டின் பருத்தி உற்பத்தி, கடந்த 2011-12ம் நிதி ஆண்டை விட, 10 சதவீதம் சரிவடையும் என, இந்திய ஜவுளி துறை கூட்டமைப்பின் தலைமை செயலர் டீ.கே.நாயர் தெரிவித்தார்.சென்ற நிதியாண்டில், பருத்தி உற்பத்தி அதிகரித்து, விலை குறைந்ததால், நடப்பாண்டில் நாடு தழுவிய அளவில் பல விவசாயிகள், சோயா,சோளம் உள்ளிட்ட மாற்று பயிர் சாகுபடியில் அதிக ஆர்வம் காட்டுவர் என, எதிர்பார்க்கப்படுகிறது. இதனால், நடப்பு நிதி ஆண்டில், உள்நாட்டில், 110 லட்சம் ஹெக்டேரில் தான், பருத்தி சாகுபடி மேற்கொள்ளப்படும் என தெரிகிறது.

இது, கடந்த நிதியாண்டில், 121 லட்சம் ஹெக்டேராக இருந்தது.கடந்த நிதியாண்டில், ஒரு கேண்டி (356 கிலோ), பருத்தியின் விலை, 63 ஆயிரம் ரூபாயாக இருந்தது. இது, தற்போது வீழ்ச்சி கண்டு, 33 ஆயிரம் முதல், 34 ஆயிரம் ரூபாயாக உள்ளது. இருப்பினும், கடந்த ஐந்தாண்டு கால விலையுடன் ஒப்பிடும் போது, இதன் சராசரி விலை தற்போது அதிகமாகவே உள்ளது என, நாயர் மேலும் கூறினார்.

### அதிக வரத்தால் ஏலக்காய் விலை சரிவு


ஜூன் 20,2012,00:51



திண்டுக்கல்:ஏலக்காய் வரத்து அதிகரித்துள்ளதால் அதன் விலை சரிவடைந்துள்ளது.போடி, குமுளியில் உள்ள ஏலதாரர்களால் ஏலக்காய்க்கு விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. ஜனவரி முதல் கிலோ 2,000 ரூபாயாக இருந்த ஏலக்காய், தற்போது கிலோ, 1,200 ஆக குறைந்துள்ளது. ஓர் ஆண்டு வரை ஏலக்காய் கெடாமல் பச்சை நிறத்துடன் இருக்கும். அதன்பின் நிறம் மங்கத் துவங்கும். ஏற்கனவே இருப்பு வைத்திருக்கும் ஏலக்காய்களைத்தான் வியாபாரிகள் சில்லறை விலைக்கு விற்பனை செய்வர். இரண்டு மாதங்களுக்கு பின் ஏலக்காய் விலை மீண்டும் 2,000ஐ தாண்டும் என்பதால், இப்போதே இருப்பு வைக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## உதயம் வாழை

பதிவு செய்த நாள் : ஜூன் 20,2012,00:00 IST



தோகைமலை ரோடு, தாயனூர் அஞ்சல், திருச்சியில் இயங்கிவரும் தேசிய வாழை ஆராய்ச்சி மையம் "உதயம் வாழை' என்னும் ரகத்தினை கண்டுபிடித்துள்ளது. இந்த புதிய ரகம் விவசாயிகள் மத்தியில் நல்ல பெயரை எடுத்து வருகின்றது. புதிய ரகம் கற்பூரவல்லி ரகத்தை ஒத்தது. மற்றும் வயது ஒரு மாதம் குறைவு. மறுதாம்பிலும் நிலையான மகசூல். இலைப்புள்ளி நூற்புழு தாங்கி வளரக்கூடியது. சீப்புகளிடையே அதிக இடைவெளி. அதிக சர்க்கரைச்சத்து (31%). ஜூஸ், ஒயின் போன்ற மதிப்புக்கூட்டப்பட்ட வாழை உட்பொருட்கள் தயாரிக்க ஏற்றது. ஆராய்ச்சி மையத்தில் பணிபுரியும் முனைவர் உமா விவசாயி களுக்கு புதிய ரகத்தின் கன்றுகளை கொடுத்துஅதன் சிறப்புகளை தெரிந்துகொள்ள அரும்பாடு பட்டுள்ளார்.

இவரிடம் கன்றுகளை வாங்கி நட்டு அதன் சிறப்புகளை நன்கு தெரிந்திருப்பவர் பிரபலவாழை விவசாயி எஸ்.சுந்தரம். (43, கடைவீதி, திருக்காட்டுப்பள்ளி - 613 104, தஞ்சாவூர்) இவர் வாழை ஆராய்ச்சி நிலையத்திற்கு ஒத்துழைப்பு நல்கியதோடு தானும் விவசாயிகளை அணுகி உதயம் வாழையை சாகுபடி செய்யச் சொல்கிறார். இவர் விவசாயிகளை திசு வளர்ப்பு கன்றுகளை சாகுபடி செய்யச் சொல்கிறார். வெளியில் கிடைக்கும் கன்றுகளை வாங்கி நடுவது சரியில்லை என்கிறார். இதோடு இவர் சில குறிப்புகளையும் கொடுக்கிறார். வாழை நடுவதற்கு ஒரு மாதம்

முன் நுண்ணுயிர் கலவை தயார் செய்ய வேண்டும். ஏக்கருக்கு 2,000 கிலோ மகசூல். தென்னை நார் கழிவோடு தலா நான்கு கிலோ அசோஸ்பைரில்லம், பாஸ்போ பாக்டீரியா, சூடோமோனாஸ், டிரைக்கோடெர்மா விரிடி கலந்து நிழலில் வைத்து லேசான ஈரப்பதம் இருக்குமாறு தினமும் தண்ணீர் தெளித்துவர வேண்டும். இதனால் நுண்ணுயிர்கள் பன்மடங்கு உயரும். அதேபோல தேர்வு செய்து இருக்கும் நிலத்தை முன்கூட்டியே உழவு செய்து சணப்பு விதைகளை விதைக்க வேண்டும். இது உயரமாக வளரும். இதன்நிழலில்தான் வாழை நடவுசெய்ய வேண்டும். வரிசைக்கு வரிசை 9 அடியும் மரத்திற்கு மரம் 9 அடியும் ஒரு கன அடி அளவில் குழி எடுத்து ஏற்கனவே தயார் செய்த நுண்ணுயிர் கலவையை தலா 3 கிலோ வீதம் இட்டு கன்றுகளை நடவு செய்ய வேண்டும். நடவிற்குபின் மண்ணை நிரப்ப வேண்டும். பாசனம் கவனித்து செய்ய வேண்டும். நடவு செய்த 15ம் நாளிலிருந்து ஒரு அடி விட்டு சணப்பை அறுத்து வாழைக்கன்றுகளை சுற்றி மூடாக்கு போடவேண்டும். 20 நாட்கள் கழித்து சணப்பு முழுவதையும் மடக்கி உழவு செய்ய வேண்டும். வாழைக்கன்றுகள் வளர்ந்து வரும் போது வாழை நிபுணர்கள் சொல்லும் எரு, உரங்கள் இடவேண்டும். மரங்களின் மேல் நீரில் கரையும் உரங்களையும் ஒட்டு திரவத்துடன் தெளிக்க வேண்டும். விவசாயிகள் சிரமப்பட்டு நுண்ணூட்ட சத்து உரங்கள் போடவேண்டும். விவசாயிகள் நிபுணர்களை அடிக்கடி அணுகி விவரங்கள் பெற்று அதன்படி செயல்படவேண்டும். இதே போன்று பயிர் பாதுகாப்பு முறைகளைக் கடைபிடித்து வியாதிகள் வராமல் தடுக்க வேண்டும். பழ வெடிப்புகள் வரக்கூடாது. உதயம் வாழை சாகுபடி செய்து அனுபவம் பெறவேண்டும். புதிய ரகத்தின் சாகுபடி நுட்பங்கள் சற்று கடினமானது. உதயம் வாழையின் தார் ரூ.1,000 விலைக்கு போகின்றது. ஒரு தார் உற்பத்தி செய்ய மொத்த செலவு ரூ.350 ஆகும். நிகரமாக ஒரு தாருக்கு ரூ.650 கிடைக்கும். வியாபாரிகள் பயமில்லாமல் உதயம் வாழைத் தாரினை விற்கலாம். தமிழகத்தில் உயரம் ரகத்திற்கு நல்ல எதிர்காலம் உள்ளது. விவசாயிகள் சாகுபடி முறைகளை கையாண்டு அதிக உற்பத்தி செய்யவேண்டும். நிபுணர்களிடம் குறிப்புகளை தெரிந்துகொண்டு சாகுபடி செய்ய வேண்டும்.**-எஸ்.எஸ்.நாகராஜன்.**

**நவீன தொழில்நுட்பம்**

பதிவு செய்த நாள் : ஜூன் 20,2012,00:00 IST

**தாட்பூட் பழம் (பேசன் புரூட்):** பாஷபுளோரா எடுலிஸ் எனப்படும் இச்செடி ஒரு கொடி வகையைச் சார்ந்தது. இச்செடியின் பழங்களிலிருந்து பழக்கூழ், பழப்பாகு, பழ ஊறல் உண்ணாங்காய் (சாலட்) போன்றவை தயாரிக்கலாம். இதன் மலர்கள் அழகிய தோற்றம் கொண்டவை. இவற்றை

அழகுக்காக வீடுகளில் வளர்க்கலாம். இக்கொடி தமிழகத்தில் அதிகமாக குன்னூரைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் கொடைக்கானலிலும் வளர்க்கப்படுகிறது. கோவையிலும் கர்நாடகாவிலும் வீடுகளில் அதிகமாக வளர்க்கப்படுகிறது.

கடல் மட்டத்திலிருந்து 1000 மீட்டருக்கு மேல் உள்ள இடங்களில் குளிர்ந்த சூழ்நிலை கொண்ட பகுதிகள் இதன் வளர்ச்சிக்கு ஏற்ற இடங்களாகும். சமவெளிப் பகுதிகளில் கோடைகாலத்தில் அதிக வெப்பமுள்ள இடங்களில் இக்கொடிகள் அதிகமாக காய்க்காது. மலை அடிவாரங்கள் இதன் சாகுபடிக்கு மிகவும் ஏற்றவை. கடும் கரிசல், வடிகால் வசதியற்ற பூமி தவிர மற்ற வகை மண்ணில் இது நன்கு வளரும்.

தாட்பூட் பழ கொடிகளில் 6 வகைகள் உண்டு. தவிர 13 வகைகள் அழகிய மலருக்காகவும் காட்டுச் செடிகளாகவும் வளர்க்கப்படுகின்றன. வணிகத் திற்காக கருமை கலந்த ரோஜா நிற தாட்பூட் ரகமும் மஞ்சள் நிற பழ ரகமும் வளர்க்கப் படுகின்றன.

**இனப்பெருக்கம்:** விதைகள் மூலம் இனப்பெருக்கம் செய்யலாம். ஒரு பழத்தில் சுமார் 150 விதைகள் இருக்கும். விதைகளை எடுத்தவுடன் முளைக்கப்போட வேண்டும். விதைகளை நாற்றங்காலில் 10-15 செ.மீ. இடைவெளிவிட்டு நட்டு ஒரு மாதத்தில் பிடுங்கி குழிகளில் நடவு செய்யலாம். கொடிகள் 40-60 செ.மீ. வளர்ந்தவுடன் பிடுங்கி நடலாம். முற்றிய பருமனுள்ள 3-5 மறைகளைக் கொண்டுள்ள குச்சிகளை நடுவதற்கு பயன்படுத்தலாம். இம்முறையில் செடிகள் ஒன்றுபோல் விளைச்சலுக்கு வரும்.

**நடுதல்:** இக்கொடிகள் தனியாக பயிரிடப் படுகின்றன. அல்லது பழத் தோட்டங்களில் பழமரங்களுக்கு மத்தியில் நடப்படுகின்றன. பின் அவற்றை நீண்டவரிசை கம்பிகளின் மீது படரவிட வேண்டும். செடிகளுக்கு இடையே 3 -4 மீட்டர் இடைவெளி கொடுக்க வேண்டும். தேவைக்கேற்ப நட்டதிலிருந்து பாசனம் செய்ய வேண்டும். கடுங்குளிர் உள்ள இடங்களில் செடிகளின் தண்டைச்சுற்றி வைக்கோல் சுற்றி பாதுகாக்க வேண்டும். ஒரு வயதுக்கு மேற்பட்ட கொடிகளுக்கு 10 கிலோ தொழு உரம், 500 கிராம் 3ம் நம்பர் கலப்பு உரம் கலந்து வைக்கலாம்.

கவாத்து செய்தல்: புதிய தளிர்கள் அதிகமாக தோன்றுமாறு ஒவ்வொரு ஆண்டும் பழைய குச்சிகளை கவாத்து செய்யவேண்டும். இரும்பு கம்பிகளை நட்டு அதன் ஊடே கீழ்கம்பி 40 செ.மீ. உயரத்திலும் அதிலிருந்து 30 செ.மீ. இடைவெளியில் 2வது, 3வது, 4வது வரிசையும் அமைத்து அவற்றின்மீது கொடிகளைப் படரவிட வேண்டும்.

**விளைச்சல்:** இக்கொடிகள் பொதுவாக மே மாதம் முதல் நவம்பர் மாதம் வரை அதிக பழங்களைத் தருகின்றன. பழங்கள் முதிர்ச்சி அடைந்துவிட்டதா என்பதை அதன் நிறத்தை வைத்து கண்டுகொள்ளலாம். பழங்களை சரியான பருவத்தில் அறுவடை செய்தால் சில நாட்களுக்கு கெடாமல் இருக்கும். நல்ல சூழ்நிலையில் வளரும் ஒரு கொடியிலிருந்து சுமாராக 7-9 கிலோ அல்லது 200-250 பழங்கள் விளைச்சலாகப் பெறலாம்.

**பயிர் பாதுகாப்பு**: பழ ஈக்கள், நாவாய்ப்பூச்சிகள், சிலந்திப்பூச்சி, இலைப்புள்ளி நோய்,

பைட்டாப்தோரா பிளைட் நோய், பியூசோரியம் வாடல் நோய் போன்றவற்றை சிபாரிசுப்படி, தக்க பூச்சி, பூஞ்சானக் கொல்லிகளைப் பயன்படுத்தி செடிகளை பாதுகாக்க வேண்டும்.

**(தகவல்:** முனைவர் மு.ஆனந்தன், முனைவர் ம.கண்ணன், தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், தடியன்குடிசை-624 212. 94438 22291)-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்

## புவிசார் குறியீட்டுப் பயிர்கள்

பதிவு செய்த நாள் : ஜூன் 20,2012,00:00 IST





தென் மாவட்ட விவசாயிகள் வாழ்வாதாரம் சிறக்க அதிக அளவில் ஏற்றுமதியாகிவரும் அதிக லாபம் தரும் புவிசார் குறியீட்டு பயிர்களான மாம்பழம், மல்லிகை மற்றும் மருந்துப் பயிர், திருநெல்வேலி சென்னா போன்றவை பயிரிட்டு தங்களின் வாழ்வாதாரம் மேம்பாடு அடைய வேண்டும்.

**மாம்பழம்:** உலகிலேயே அதிக அளவு மாம்பழம் உற்பத்தி செய்யும் நாடு இந்தியா மட் டுமே. ஆண்

டுக்கு 125 லட்சம் டன் மாம்பழம் உற்பத்தியானபோதிலும் ஏற்றுமதி செய்யப்படும் அளவு 1 விழுக்காட்டிற்கும் குறைவு. இப்போது 83 ஆயிரம் டன்களாக இருக்கும் ஏற்றுமதி அளவு அடுத்த நிதியாண்டில் 90 ஆயிரம் டன்களாக உயரும் (அதாவது 8 விழுக்காடு அதிகமாக இருக்கும்) என்று அபேடா (வேளாண் பொருள்கள் பதப்படுத்தப்பட்ட உணவுப்பொருள் ஏற்றுமதி ஆணையம்) எதிர்பார்க்கிறது.

தமிழ்நாட்டில் 2001-02ம் ஆண்டில் 1.10 லட்சம் எக்டேரில் மாம்பழம் சாகுபடி செய்யப்பட்டு, ஆண்டுக்கு 4.38 லட்சம் டன்கள்தான் உற்பத்தியானது. 2006-ம் ஆண்டு புள்ளி விபரப்படி 1.62 லட்சம் எக்டேரில் 9 லட்சம் டன்கள்தான் உற்பத்தி செய்கிறோம். மதுரை, திண்டுக்கல் மாவட்டத்தில் மாம்பழம் வளர தேவையான சாதகமான சூழல் நிலவுவதால் இப்பகுதியில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் ஒரு எக்டேருக்கு 5.52 டன் மாம்பழ விளைச்சல்தான் உள்ளது. இது சராசரி இந்திய அளவான ஒரு எக்டேருக்கு 6.2 டன் என்பதைவிட குறைவு. மாம்பழ சாகுபடியில் நாம் புதிய சாகுபடி முறைகளைக் கையாளுவதன் மூலம் இதனை சரிகட்டலாம். இந்த மண்ணில் விளையும் பழங்களுக்கு அரிய சுவையும் மணமும் உள்ளது என்பதுதான் சிறப்பு. இந்த சிறப்பை இழக்காமல், விளைச்சலை மட்டும் மேம்படுத்தும் தொழில் நுட்பத்தை தேர்வு செய்ய வேண்டும். மேலும் உரம் போடாத மரங்களில் விளையும் பழங்களுக்குக் கூடுதல் விலை கிடைக்கும் என்பதால் அத்தகைய முறைகளில் மாம்பழ உற்பத்தி நல்ல வருவாயைத்தரும்.

**2. அவுரி சென்னா**: நமது நாட்டில் அதிக அளவில் உற்பத்தி செய்யப்பட்டு ஏற்றுமதியாகிவரும் மருந்துப்பயிர்களில் அவுரி முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. இது தமிழ்நாட்டில் குறிப்பாகத் திருநெல்வேலி மாவட்டத்தில் அதிகம் விளைவதால் திருநெல்வேலி சென்னா(டின்னவேலி சென்னா) என்றும் அழைக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் திருநெல்வேலி, தூத்துக்குடி, மதுரை, ராமநாதபுரம், விருதுநகர் ஆகிய மாவட்டங்களிலும் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. தற்போது அவுரி சுமார் 2,700 எக்டர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு ஆண்டுதோறும் சுமார் 5000 டன் இலைகளும் காய்களும் உற்பத்தி செய்யப்படுகின்றன. இதனால் சுமார் 45 மில்லியன் ரூபாய் வரை அந்நியச் செலாவணி கிடைக்கிறது.

**பயன்கள்:** அவுரியின் இலை மற்றும் காய்கள் மலச்சிக்கல் நோயைக் குணப்படுத்த பெரிதும் பயன்படுகிறது. இலைகளிலும் காய்களிலும் சென்னோஸைடு மூலப்பொருட்கள் அடங்கியுள்ளன. மூலம் மற்றும் மலச்சிக்கல் நோய்களைக் குணப்படுத்த இவை பயன்படுகின்றன. உலகளவில் அவுரி ஒன்று மட்டுமே இயற்கை மலமிளக்கியாகப் பயன்படுத்தப் படுகிறது.

**ரகங்கள்:** அவுரியில் இரண்டு வகைகள் உள்ளன. ஒன்று நமது நாட்டில் விளைவிக்கப்படும் திருநெல்வேலி சென்னா, மற்றொன்று கேசியாசென்னா அல்லது அலெக்சாண்டரியன் சென்னா என்பவை ஆகும். இது சூடான் நாட்டில் அதிகம் விளைவிக்கப்படுகிறது. திருநெல்வேலி சென்னாவில் 1.2 முதல் 2.5 சதம் வரை சென்னோஸைடு மூலப்பொருட்கள் உள்ளன. ஆனால் அலெக்சாண்டிரியன் வகையிலோ இரண்டு மடங்கு அதிக மூலப்பொருட்கள் உள்ளன. தற்போது

இந்த வகை அவுரிக்கு ஏற்றுமதி மதிப்பு அதிகமாக இருந்தாலும் உற்பத்தி ஆகின்ற அளவு குறைவு.

**3. மல்லிகை**: மதுரை என்றதும் நம் நினைவில் நிற்பது மல்லிகைதான். மதுரை மல்லிக்கு நிகர் மதுரை மல்லி மட்டும்தான். மணக்கும் மல்லியின் வாசனையை கண்டதும் மதுரை மல்லியா! என்று கேட்கும் அளவிற்கு நம்மோடு கலந்தது. இந்தியாவில் மட்டுமல்ல, மலேசியா, சிங்கப்பூர் என வெளிநாடுகளிலும் தன் புகழோடு தமிழகத்தின் புகழையும் சேர்த்து மணக்க வைக்கிறது இம்மதுரை மல்லி. உலகின் பல பகுதிகளுக்கு மல்லிகையும் மல்லிகையிலிருந்து எடுக்கப்படும் வாசனை திரவியங்களும் ஏற்றுமதியாகிறது. மல்லிகையிலிருந்து சாறு தயாரிக்கும் தொழிற்சாலைகள் பல மதுரையில் உள்ளன. மதுரை மாவட்டத்தில் வர்த்தக அடிப்படையில் மல்லிகைப்பூவை பதப்படுத்தும் 25 தொழிற்சாலைகள் உள்ளன. அவை மல்லிகைப்பூவை பசையாகவும் திரவமாகவும் மாற்றி ஏற்றுமதி செய்கின்றன. தொழில் வட்டாரங்கள் வழங்கும் தகவலின்படி 875 கிலோ மல்லிகைப்பூவில் இருந்து ஒரு கிலோ மல்லிகைப்பசை தயாரிக்கலாம். ஒரு கிலோ மல்லிகைப்பசையின் உலகச் சந்தை மதிப்பு இந்திய ரூபாயில் 25,000 ஆகும். இதற்கு மேலும் விலை கூடுவதுண்டு. மல்லிகைப்பூ ஒரு நாளில் வாடிவிடும். மல்லிகைப்பசையை முறையாகப் பாதுகாத்தால் அதை ஐந்து ஆண்டு வரை வைத்திருக்க முடியும்.

சோப்பு, ஷாம்பு, தலை எண்ணெய், முக கிரீம், அகர்பத்திகள் போன்றவற்றிற்கு வாசனை ஊட்ட மல்லிகைப்பசை பயன்படுத்தப் படுகிறது. மதுரை தயாரிப்பான மல்லிப்பசையை இறக்குமதி செய்யும் நாடுகளில் பிரான்சும் அமெரிக்காவும் முன்னணி இடம் வகிக்கின்றன.

**4. கருங்கண்ணிப்பருத்தி**: புளியங்குடி பாம்புக்கோயில் ரயிலடியிலிருந்து 5 கி.மீ. தொலைவில் உள்ளது. இங்கு கைத்தறி வேட்டி சிறந்த பெயரைப் பெற்றுள்ளது. இங்கு கருங்கண்ணி பருத்தி விளைச்சல் அதிகம். ஆனால் தற்போது பழைய கருங்கண்ணிப் பருத்தி ஏதோ கனவுபோல மறைந்துவிட்டது. கருங்கண்ணிப் பருத்தி ஒரு மரக்கால் நிலத்தில் - 8 சென்ட் நிலம் - அரை குவின்டால் பருத்தி விளைந்தால் அது ஒரு மேனியாகும்.

பிஷப் ராபர்ட் கால்டுவெல் தமது History of Tirunnelvelly என்ற நூலில் தூத்துக்குடியைப் பருத்தி வணிகத்தின் தலைநகரம் (Emporium of Cotton Trade) என்று குறிப்பிட்டுள்ளார். தூத்துக்குடிப் பகுதிக் கரிசல் காட்டில் விளைந்த பருத்தி கருங்கண்ணி என்ற பெயருடையது. இது உலக அளவில் தரம் வாய்ந்த பருத்தியாக முற்காலத்தில் போற்றப்பட்டது. கோவில்பட்டி கருங்கண்ணி என்றே இது அண்மைக் காலம் வரை பெயர் பெற்றிருந்தது. அதிக மழை பெய்தாலும் மழையே பெய்யாவிட்டாலும் தாக்குப் பிடித்து வளரக்கூடிய தாவர வகை கருங்கண்ணிப் பருத்தியாகும். கருங்கண்ணிப் பருத்தி விதைக்கும்போது ஊடுபயிர்களாக உளுந்து, எள், ஆமணக்கு, தினை, நிலக்கடலை ஆகியவற்றை விதைப்பார்களாம். விதைக்கும் வரிசை முறை வருமாறு:

முதலில் ஆறுக்கு ஒன்று என்ற அளவில் சால்களில் உளுந்து. பின்னர் ஒரு வரிசை இடைவெளி விட்டு கடலை. பொழிகளில் எள் அல்லது ஆமணக்கு. இறுதியாகப் பருத்தியுடன் தினை. இவற்றை கடலை, உளுந்து, எள், தினை, பருத்தி என்ற முறையில் அறுவடை

செய்வார்கள்.முனைவர் சி.சுவாமிநாதன், பேராசிரியர், உழவியல் துறை,க.விக்ரம் சித்தார்த்தா, இளநிலை ஆராய்ச்சியாளர்,உழவியல் துறை,வேளாண்மைக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மதுரை.

## வாழை அறுவடை நிறைவு தார் விலை ரூ. 75 வரை உயர்வு

பதிவு செய்த நாள் : ஜூன் 20,2012,01:35 IST

கோபிசெட்டிபாளையம்: வாழைத்தார் அறுவடை சீஸன் நிறைவு காரணமாக, வரத்து குறைந்ததால், 75 ரூபாய் வரை விலை அதிகரித்துள்ளது. கோபி வட்டாரத்தில் நடப்பாண்டு பயிரிட்டப்பட்ட வாழைத்தார் அறுவடை சீஸன் முடிந்துள்ளது. ஒரு சில இடங்களில் மட்டுமே வாழை அறுவடை நடக்கிறது. அறுவடையாகும் வாழைத்தார் கோபி வேளாண் உற்பத்தி மற்றும் விற்பனை சங்கம் மூலம் ஏலம் விடப்படுகிறது. வாழை வரத்து குறைந்து விட்டதால், 50 முதல், 75 ரூபாய் வரை விலை உயர்ந்துள்ளது. விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். கேரளாவில் ஜூலை மாதம் நடக்கும் ஓணம் பண்டிகையை முன்னிட்டு, வாழைத்தார் தேவை அதிகரித்துள்ளது. எனவே, விலை மேலும் அதிகரிக்கும் என, விவசாயிகள் எதிர்பார்த்துள்ளனர். கதளி கிலோ, 24.50 ரூபாய், நேந்திரம், 34.50 ரூபாய், செவ்வாழை ஒரு தார், 610 ரூபாய், ரஸ்தாளி, 315 ரூபாய், தேன் வாழை, 420 ரூபாய், ரொபஸ்டிரா, 270 ரூபாய், மொந்தன், 275 ரூபாய், பச்சை நாடா, 310 ரூபாய்க்கு விற்பனையாகிறது.வாழை விவசாயி ஒருவர் கூறியதாவது: கோபி வட்டாரத்தில் வாழை அறுவடை சீஸன் முடியும் தருவாயில் உள்ளது. அறுவடை நேரத்தில், 6,000 முதல், 8,000 வாழைத் தார்கள் வரை விற்பனைக்கு கொண்டு வரப்பட்டன. அறுவடை நிறைவுறும் நிலையில், 4,000 வாழைத்தார் மட்டுமே வரத்தாகிறது. நேந்திரம் வாழைத்தார் வரத்து மிகவும் குறைந்து விட்டதால் கிலோ, 34.50 ரூபாய்க்கு விற்பனையாகிறது. ஜூலை மாதம் கேரளாவில் நடக்கும் ஓணம் பண்டிகையை முன்னிட்டு, இங்கிருந்து அதிகளவில் வாழைத்தார் செல்லும். இதன் காரணமாக வாழை விலை மேலும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. வாழை விலை உயர்ந்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.இவ்வாறு அவர் கூறினார்.

## மாங்காய்களில் பூச்சி தாக்குதல் கட்டுபடுத்தும் வழிமுறைகள்

பதிவு செய்த நாள் : ஜூன் 20,2012,00:50 IST

தேனி: பெரியகுளம், போடி, ஆண்டிபட்டி, கே.சி., பட்டி பகுதிகளில் மாம்பழ அறுவடை நடந்து வருகிறது.இவற்றில் 80 சதவீதம் காசா ரகமாகும்.

மாந்தோப்புகளில் தற்போது பறிக்கப்படும் பழங்களில், பூச்சி தாக்குதல் அதிகம் உள்ளது. இதை தடுக்க சேதமுற்ற பழங்களையும்,உதிர்ந்த பழங்களையும் சேகரித்து மண்ணில் புதைக்க வேண்டும். இதனால் ஈக்களால், மாம்பழங்கள் வீணாவது தடுக்கப்படும்.தவறினால் புழுக்கள் மாங்காய்களில் வளர்ந்து,பழங்களை சாப்பிட முடியாத நிலை ஏற்பட்டு விவசாயிகளுக்கு பொருளாதார இழப்பு ஏற்படும். உதிர்ந்த, சேதமடைந்த பழங்கள் அகற்றிசுத்தமாக வைத்திருக்க வேண்டும்.

பூச்சிகளை கட்டுப்படுத்த டை குளோரோவாஷ்,குளோரி பைரிபாஸ் போன்ற மருந்துகளை, 1 லிட்டர் தண்ணீரில் 2 மில்லி வீதம் கலந்து மரங்களில் தெளித்தால் கூட்டு பூச்சியை கட்டுப்படுத்தலாம். பழ ஈ க்களை பிரமோன் கவர்ச்சி பொறிகள் வைப்பதன் மூலம் தாய் ஈக்களை கட்டுபடுத்தி சேதாரத்தை தவிர்க்கலாம்,என மாவட்ட தோட்டக்கலைத்துறை துணை இயக்குனர் முருகன் தெரிவித்துள்ளார்.

---

தினத் தந்தி

*நடப்பு சந்தை பருவத்தில் உலக சர்க்கரை உற்பத்தி 5% உயரும்*



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*
*புதுடெல்லி*
*நடப்பு 2011–12 (அக்டோபர்–செப்டம்பர்) சர்க்கரை சந்தைப்படுத்துதல் பருவத்தில் உலக சர்க்கரை உற்பத்தி 5 சதவீதம் அதிகரித்து 17.28 கோடி டன்னாக உயரும் என உணவு மற்றும் வேளாண் அமைப்பு (எஃப்.ஏ.ஓ) மதிப்பீடு செய்துள்ளது. கடந்த சந்தைப்பருவத்தில் உற்பத்தி 16.51 கோடி டன்னாக இருந்தது.*

*பிரேசில், மெக்சிகோ மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளில் எதிர்பார்க்கப்படும் உற்பத்தி குறைவினை ஈடுகட்டும் வகையில் ரஷ்யா, பாகிஸ்தான் மற்றும் ஐரோப்பிய நாடுகளில் உற்பத்தி அதிகரிக்கும் என அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.*

*இந்தியா மற்றும் பாகிஸ்தான் உள்ளிட்ட வளர்ந்து வரும் நாடுகளின் உற்பத்தி முந்தைய ஆண்டைவிட 1.2 சதவீதம் அதிகரித்து 13.1 கோடி டன்னாகவும், ரஷ்யா மற்றும் ஐரோப்பிய நாடுகளின் உற்பத்தி 17 சதவீதம் அதிகரித்து 4.2 கோடி டன்னாகவும் அதிகரிக்குமென கூறப்படுகிறது.*

*சர்க்கரை உற்பத்தியில் உலகின் இரண்டாவது பெரிய நாடான இந்தியாவில் உற்பத்தி 2.81 கோடி டன்னாக உயரும் என எஃப்.ஏ.ஓ அமைப்பும், இந்திய சந்தை அமைப்புகள் 2.60 கோடி டன் எனவும், மத்திய வேளாண் அமைச்சகம் 2.52 கோடி டன் எனவும் மதிப்பீடுகள் செய்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. முந்தைய 2010–11 சந்தை பருவத்தில் இந்தியா 2.60 கோடி டன் சர்க்கரையை உற்பத்தி செய்திருந்தது.*